கொவன்றி தமிழர் நலன்புரிச் சங்கம்
Coventry Tamil Welfare Association

http:// HYPERLINK http://www.tamils.org.uk
www.tamils.org.uk
Email: coventrytamils2002@gmail.com

தலைவர்:- உயர்திரு க.அரியரத்தினம். 07823535094

தை மாத இதழ்
NEWS BULLETIN
JANUARY 2020
ஆக்கம்:- ஸ்ரீ.பகீரதன்

நாள்	நிகழ்வு
11/01/2020 முதல்	தமிழ்ப் பாடசாலை மீண்டும், சகல வளங்களையுமுடைய புதிய பாடசாலையான President Kennedy School, Rookery Lane, Coventry CV6 4GL ல் காலை 9:45 மணிக்குப் பாடசாலைக் கீதத்துடன் ஆரம்பித்து நடைபெற்று வருகின்றது.
16/02/2020	OFAAL பரிசளிப்பு விழா நடைபெறும்
11/04/2020 -25/04/2020	இரண்டாம் தவணை விடுமுறைக்காகத் தமிழ்ப் பாடசாலை நடைபெற மாட்டாது. கலைப் பாடங்கள் வழமைபோல் நடைபெறும்.
02/05/2020	மூன்றாம் தவணைக்காகத் தமிழ்ப் பாடசாலை மீண்டும் ஆரம்பமாகும்.
23/05/2020	கொவன்றி தமிழர் நலன்புரிச் சங்கத்தின் ஆண்டு விழா நடைபெறும்.

தமிழர் பண்டிகை தைப்பொங்கல்

தமிழுக்குத் தை 1 (January 14/15) அன்று தமிழர்களால் சிறப்பாகக் கொண்டாடப்படும் ஒரு தனிப்பெரும் விழா. தமிழர் திருநாளாக இலங்கை, தமிழ்நாடு, மலேசியா, சிங்கப்பூர், ஐரோப்பிய நாடுகள், வட [1]அமெரிக்கா, தென் ஆபிரிக்கா, மொரிசியசு என தமிழர் வாழும் அனைத்து நாடுகளிலும் கொண்டாடப்படுகிறது. இவ்விழா சமயங்கள்



கடந்து பெரும்பாலான தமிழர்களால் கொண்டாடப்படுகிறது.
"தைப்பிறந்தால் வழி பிறக்கும்" என்பது பழமொழி. தைமாதம் முதல் நாள் தைப்பொங்கல். சூரியனைப் பொங்கலிட்டு நன்றியுணர்வோடு வழிபாடு செய்கிறோம். இரண்டாம் நாள் மாட்டுப்பொங்கல். மாடுகளுக்குப் பொங்கல் வைத்து வணக்கம் செலுத்துகிறோம். மூன்றாம் நாள் சிலபகுதிகளில் ஜல்லிக்கட்டு, மஞ்சுவிரட்டு என்னும் வீர விளையாட்டு நடைபெறும்.

65 ஆவது அகவை தின விழா

கொவன்றி மாநகரிலே வாழ்கின்ற தமிழ் மக்கள், எமது எதிர்கால சந்ததிக்கு எமது தாய்மொழி தமிழைக் கற்பிக்க வேண்டும் கலைகளை வளர்க்க வேண்டும் என்ற நல்லெண்ணத்தோடும், புதிதாக இந்த நாட்டுக்கு வருகை தரும் எமது மக்களுக்கு இங்குள்ள சட்ட நடைமுறைகளைப் பயன்படுத்தி நிரந்தர வாழ்க்கை முறையை ஏற்படுத்திக் கொள்வதற்கு உதவும் உயரிய

நோக்கத்தோடும், இன்னும் பல அரிய சேவைகளுக்காகவும் கொவன்றி தமிழர் நலன்புரிச் சங்கத்தை 2002 ஆம் ஆண்டு உருவாக்கி, எதிரே வந்த தடைகளைத் துணிவாக உடைத்தெறிந்து இன்றுவரை வெற்றிநடை போட வைத்துக்கொண்டிருக்கும் எமது அன்புக்குரிய தலைவர் சிவத்தமிழ்க் காவலர் உயர்திரு கந்தையா அரியரட்ணம் அவர்களுக்கு இனிய பிறந்தநாள் நல்வாழ்த்துக்கள்.



இதர செயற்பாடுகளில் இணைந்திருக்கும் கொவன்றி தமிழர் நலன்புரிச்சங்கம்

Coventry City Council இன் ஏற்பாட்டில் ***21/01/20*** அன்று நடைபெற்ற ***"Schools of Sanctuary"*** எனும் பல்லின மக்களும் கலந்துகொண்ட நிகழ்விலே, கொவன்றி தமிழர் நலன்புரிச் சங்கம் சார்பாக, உபசெயலாளர் திரு. பகீரதன் ஸ்ரீநாதன் கலந்து கொண்டார்.

சீன, இந்திய மற்றும் இன்னும் பல மொழிகளைக் கொண்ட பாடசாலைகள், மற்றும் பல்வேறு அகதி நிறுவனங்கள், இனத்துவேஷங்களைக் கட்டுப்படுத்தும் அமைப்புகள், நூலகத்தினர், கொவன்றியின் பிரபல பாடசாலைகளின் அதிபர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர்.

முக்கிய அம்சங்களாக, கொவன்றி மாநகர் ஒரு பல்லின மக்களின் சரணாலயமாக விளங்குவதோடு, பல பாடசாலைகளில், அதிகளவு வெவ்வேறு இன மாணவர்களும் கல்வி கற்கின்றார்கள். எல்லா இன, மொழிப் பாடசாலைகளின் அமைப்புகளுக்குமிடையே ஒரு புரிந்துணர்வையும் ஒருவருக்கொருவர் உதவும் நிலைப்பாட்டையும் ஏற்படுத்தும் ஒரு நிகழ்வாகவே இது அமைந்தது. எமது நிறுவனம் சார்ந்த செயற்பாடுகள் பற்றி, அவரால் தெரிவிக்கப்பட்டது.



(Conservative) பழமைவாதக் கட்சியின் வேண்டுகோளுக்கு இணங்க, கொவன்றி மாநகரில், அவர்களுடைய அரசியல் மற்றும் சமூக நலன்களுக்கான செயற்பாடுகளில், கொவன்றி தமிழர் நலன்புரிச் சங்கத்தின் சார்பில், கனிஸ்ட உபதலைவர் திரு விஜயரூபன் விவேகானந்தம் முழுமையாக இணைந்து செயற்பட்டு வருகின்றார்



கொவன்றி தமிழர் நலன்புரிச் சங்கம், மதுரையில் தமிழ் நாட்டு அரசாங்கத்தால் உருவாக்கப்பட்ட, உலகத் தமிழ்ச் சங்கத்தின் உறுப்பினராக இணைக்கப்பட்டுள்ளது.

உலகத் தமிழ்ச் சங்கத்தின் மகாநாடு 26.03.2020 முதல் 30.03.2020 வரை நடைபெறும். இதில் பங்கு கொள்ள விரும்புவோர் தயவுசெய்து தொடர்பு கொள்ளவும். மகாநாட்டில் பங்கு கொள்ள முடியாதவர்கள், மாநாட்டுக்கு உங்கள் திறமையை வெளிப்படுத்த ஒரு அரிய வாய்ப்பு - உலகத் தமிழ் அமைப்புகள் மாநாடு - 2020

பின்வரும் பொருண்மைகளில் கட்டுரை அனுப்புமாறு கேட்டுக் கொள்கிறோம்.

மாநாட்டுப் பொருண்மைகள்:

1. உலகத் தமிழ் அமைப்புகளின் நோக்கங்கள், செயற்பாடுகள் குறித்த விவரங்கள்.
2. உலகத் தமிழ் அமைப்புகளின் திட்டங்கள், தேவைகள்.
3. மொழி, இலக்கியம், பண்பாடு மற்றும் கலைகளைத் தக்க வைத்தல்.
4. உலகத் தமிழ் வளர்ச்சி.
5. அயலகத் தமிழ்க் கல்வி.
6. அயலகத் தமிழ் இலக்கியம்.
7. உலகத் தமிழறிஞர்கள் மற்றும் தமிழாராய்ச்சி.
8. மொழிபெயர்ப்புகள்.

விரும்பியவர்கள் தொடர்பு கொள்ளவும்,


எண்ணங்களில் உருவான கைவண்ணங்கள்


கொவன்றி தமிழர் நலன்புரிச் சங்கத்தின் தமிழ்ப் பாடசாலை மாணவர்களின் கைவண்ணத்தில் உருவான சில ஆக்கங்கள்.


தமிழர்களுடைய பாரம்பரிய உணவு வகைகளையும், நாம் அன்றாடம் உட்கொள்ள வேண்டிய ஆரோக்கியமான உணவுகளையும் பற்றி மிகவும் அழகான படங்கள் மூலம் செல்வி அனோஜி மதிமன்னராஜா, மற்றும் செல்வன் அர்ஷென் விஜயரூபன் ஆகியோரும், உருவ அமைப்புகள் பற்றி நாம் அன்றாடம் வாழ்கின்ற வீட்டின் அமைப்புக்களை உதாரணமாகக் காட்டி, செல்வி கிருத்திகா திலீபன், செல்வன் நேத்திரன் துறைவன், மற்றும்

செல்வி அக்ஷிதா ***(Akshitha)*** ஜெகதீசன் ஆகியோரும் வெளிப்படுத்தியிருக்கிறார்கள். ஏனையோரின் ஆக்கங்கள் தொடர்ந்து வரும் சஞ்சிகைகளில் இடம்பெறும்.

வெறுமனே கற்பித்தல் செயற்பாடுகள் மட்டுமல்லாது, அவற்றைச் செயற்பாடுகளின் ஊடாக, அதாவது மேலதிக விளக்கங்களை மாணவர்களின் மனதிலே பதியக்கூடிய வகையில் வழங்கும் ஆசிரியர்களின் கற்பித்தல் முறை பாராட்டுக்குரியதாகும்.











பாராட்டி வாழ்த்துகின்றோம்

எமது தமிழ்ப் பாடசாலையின் வளர்ச்சிப் பாதையில் பல தமிழ் மாணவர்கள் உருவாக்கப்பட்டுள்ளார்கள். ஒரு சில ஆசிரியர்களும் உருவாகியுள்ளார்கள்.

2002ல் இருந்து ***2020*** வரை எமது பாடசாலை பரிணாம வளர்ச்சியடைந்துள்ளது. 6 மாணவர்களுடன் தொடங்கி இன்று 200 க்கும் மேலான மாணவர்கள், 26 ஆசிரியர்கள், தமிழ் மொழி, மற்றும் கலைப் பாடங்கள் என பிரம்மாண்ட வளர்ச்சியுடன் இயங்கிக் கொண்டிருப்பது எம் எல்லோருக்கும் பெருமையே.

ஒவ்வொரு வருடமும் பிரித்தானிய தமிழ்ப் பரிட்சைச் சபை, ***OFAAL*** எனப் பல பரீட்சைகளில் தோற்றிப் பல பதக்கங்களையும், சான்றிதழ்களையும் மாணவர்கள் பெறுவதோடு, கலைப்பாட மாணவர்களும் பல நிகழ்வுகளில் கலந்து கொள்வதோடு, அரங்கேற்றத்தை முடித்து எமது பாடசாலைக்குப் பெருமை சேர்த்துக் கொண்டிருக்கிறார்கள்.